

தென்காசி வடக்கு மாவட்டம் மேல நீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா,40க்கு 40 நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி விழா மற்றும் வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு ஆகிய முப்பெரும் விழா பொதுக்கூட்டம் குருக்கள்பட்டி கலைஞர் திடலில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள். உடன் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் எம்.பி.தங்கவேலு, பரமகுரு, பத்மநாதன், சரவணன், டாக்டர். செண்பக விநாயகம், முத்துச்செல்வி, பெரியதுரை, லாலா சங்கர பாண்டியன், உமா மகேஸ்வரி உள்பட கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

## காரைக்குடியில் பலத்த மழை!

காரைக்குடி, ஜூன் 21 - காரைக்குடி பகுதியில் நேற்று முன்தினம் மாலை சூறாவளி காற்றுடன் பலத்த இடி, மின்னலுடன் கன மழை கொட்டியதால், பல இடங்களில் மரங்கள் சாய்ந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சிவ கங்கை மாவட்டம், காரைக் குடி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளான கோட்டையூர், அழகாபுரி, கழனிவாசல், கண்டனூர் பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை திடீரென பலத்த இடி, மின்ன லுடன் மழை கொட்டியது.

இடையிடையே பலத்த சூறாவளி காற்றும் வீசியது. சுமார் 3 மணி நேரம் பெய்த மழையால் சாலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட் டது. பல இடங்களில் மின் சாரம் துண்டிக்கப்பட்டது. மேலும், பல இடங்களில் மரங்கள் சாய்ந்து போக்கு வரத்து பாதிக்கப்பட்டது. பலத்த மழை பெய்து பூமி குளிர்ந்ததால் பொதுமக் கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (19.06.2024) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறையின் 2024–2025 ஆம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்க குறிப்பு மற்றும் அறிவிப்புகள், துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.கே.கோபால், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச்செயலாளர்/ ஆணையாளர் ஹர்சகாய் மீனா. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் சு.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு காவல்துறை தலைவர் க.ஜோஷி நிர்மல் குமார், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகபொதுமேலாளர் (சந்தை) ரெ. சதீஷ், மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

‘நீட்’ தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி

# திராவிட மாணவர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் - ‘இந்தியா’ கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்று முழக்கம்!

சென்னை, ஜூன் 21-

திராவிட மாணவர் கழ கம் சார்பில் ஒன்றிய அரசு ‘நீட்’டை ரத்து செய்ய வலி யுறுத்தி சென்னை வள்ளு வர் கோட்டத்தில் 18.6.2024 அன்று மாலை 4 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடை பெற்றது.

மருத்துவக் கல்வியில் 12 ஆம் வகுப்பு மதிப்பெண்க ளின் அடிப்படையில் மாண வர் சேர்க்கை நடைபெற வேண்டும். நீட் உள்ளிட்ட எவ்வித நுழைவுத் தேர்வும் கூடாது என்று ஆர்ப்பாட் டத்தில் கண்டன உரையாற் றிய தலைவர்கள் வலியுறுத் தினார்கள்.

மேலும் நீட் தேர்வின் மோசடிகள், குளறுபடி களை புள்ளிவிவரத் தகவல் களுடன் அம்பலப்படுத்தி னார்கள். கிராமப்புற, தாழ்த்தப்பட்ட, பிற்படுத் தப்பட்ட மாணவச் செல் வங்கள் மருத்துவக்கல் வியை தடுக்கின்ற, தடை செய்வதே நீட் தேர்வின் நோக்கம் என்பதை எடுத் துக்காட்டி, மாணவர்களின் கல்வி உரிமை பறிப்பு, மாநில உரிமை பறிப்பு என நீட் தேர்வின் பெயரால் ஒன்றிய அரசின் அதிகார ஆணவத்தை எடுத்துக் காட்டி, அந்த உரிமைகளை மீட்பதில் தொடர்ச்சியாக போராடி வருகின்ற திராவி டர் கழகத்துடன் இணைந்து, திராவிடர் கழ கத் தலைவர் கி.வீரமணி தலைமையில் வெற்றி பெறும்வரை போராடு வோம், வெற்றி பெறு வோம் என்று தலைவர்கள் உறுதிபட கூறினார்கள்.

ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசு அமைந்த பிறகே நீட் தேர்வு திணிக்கப்பட்டுள் ளது. நீட் தேர்வு கூடாது, நீட்டிலிருந்து விலக்கு அளிக் கின்ற தமிழ்நாடு அரசின் சட்ட மசோதாக்களுக்கு குடியரசுத் தலைவர் உடன டியாக ஒப்புதலை அளிக்க வேண்டும் என்றும் தலை வர்கள் வலியுறுத்தினார்கள்.

திராவிடர் கழகத் தலை வர் கி.வீரமணி அவர்கள் உரையில், நீட் தேர்வு எதிர்ப்புப்போராட்டத்தின் அடுத்த கட்டமாக நீட் எதிர்ப்பு இரு சக்கர வாக னப் பேரணிகள் 5 குழுக்க ளாக தமிழ்நாட்டின் பல் வேறு பகுதிகளிலிருந்தும் 11.7.2024 அன்று தொடங்கி கல்வி வள்ளல் பச்சைத்தமி ழர் காமராசர் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளான 15.7.2024 அன்று சேலத்தில் நிறைவு பெறும் என்றும், அனைத்துக்கட்சி யினரும் நீட் எதிர்ப்பு இரு சக்கர வாகனப் பேரணிக்கு முழு ஆதரவை வழங்க வேண்டும் என்றும், மாண வர்கள், பெற்றோர் உள் ளிட்ட பொதுமக்களிடம் நீட் கூடாது என்பதற்கான விழிப்புணர்வை இந்த பேர ணிமூலம் ஏற்படுத்தப்படும் என்றும் அறிவித்தார்.

திராவிட மாணவர் கழக மாநில பொறுப்பாளர்கள் செ.பெ.தொண்டறம், வி.தங்கமணி, நா.ஜீவா, த.சிவபாரதி, சு.இனியன், ச.மணிமொழி, மு.இராகுல், க.அறிவுச்சுடர், வெ.இளஞ் செழியன், பா.கவிபாரதி, சு.ச.திராவிடச் செல்வன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

திராவிட மாணவர் கழக மருத்துவக் கல்லூரி மாநில அமைப்பாளர் ப.நீலன் வர வேற்றார்.

திராவிட மாணவர் கழக மாநிலச் செயலாளர் இரா. செந்தூர்பாண்டியன் தலை மையேற்று உரையாற்றி னார்.

கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் தொடக்க உரையாற்றி னார்.

கழகப் பொருளாளர் வீ.குமரேசன், பொதுப்பள் ளிக்கான மாநில மேடை பொதுச்செயலாளர் பு.பா. பிரின்ஸ கஜேந்திரபாபு, மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் சட்டமன்ற உறுப் பினர் எம்.எச். ஜவாஹி ருல்லா, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாநிலப் பொதுச்செயலாளர் கே.ஏ.எம்.முகம்மது அபுபக் கர், மதிமுக கொள்கை விளக்க அணி மாநிலச் செய லாளர் ஆ.வந்தியத்தேவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மத்தியக் குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ் ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலை வர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் நாடாளு மன்ற உறுப்பினர் எழுச்சித் தமிழர் முனைவர் தொல். திருமாவளவன், திமுக செய் தித் தொடர்புக் குழுத் தலை வர் டி.கே.எஸ். இளங்கோ வன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

நிறைவாக திராவிடர் கழ கத் தலைவர் கி.வீரமணி அவர்கள் கண்டன சிறப் புரை ஆற்றினார்.

“‘நீட்’ சமூகநீதியைச் சாக டிக்கும் கண்ணாடி” என் னும் ரூ. 5 மதிப்பிலான புத் தகம் 100 புத்தகங்கள் கொண்ட தொகுப்பை கி.வீரமணி அவர்களிடமி ருந்து கழகத் தோழர்கள் உள்பட ஏராளமானவர்கள் பெற்றுக்கொண்டனர்.

கழக செயலவைத் தலை வர் வழக்குரைஞர் ஆ.வீர மர்த்தினி, நீலன், ஊமை. ஜெயராமன், அரூர் இரா ஜேந்திரன், மேலூர் எரி மலை, சேலம் பூபதி, தாம்ப ரம் ப.முத்தையன், எழிலன், ஈரோடு த.சண்முகம் உள் பட பலரும் புத்தகங்களைப் பெற்றுக்கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் திரு நெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் இராபர்ட் புரூஸ், மேனாள் மாவட்ட நீதிபதி இரா.பரஞ்ஜோதி, தமிழ்நாடு சட்டமன்ற மேனாள் செயலாளர் மா. செல்வராஜ், கழக வெளியு றவுச் செயலாளர் கோ.கரு ணாநிதி, விடுதலைச் சிறுத் தைகள் கட்சி திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, முனை வர் மஞ்சுளா செல்வம், விழிகள் வேணுகோபால், துணைப்பொதுச்செயலா ளர் வழக்குரைஞர் சே. மெ.மதிவதனி, மகளிரணி மாநில செயலாளர் தகடூர் தமிழ்ச்செல்வி, மகளிர் பாசறை மாநிலச் செயலா ளர் வழக்குரைஞர் பா.மணி யம்மை, மாநில இளைஞ ரணி துணைச் செயலாளர் சோ.சுரேஷ். மாநில ப.க. துணைத் தலைவர் பொறி யாளர் வேல்.சோ.நெடுமா றன், தலைமைக்கழக அமைப்பாளர்கள் வி.பன் னீர்செல்வம், தே.செ. கோபால் உள்பட கழகப் பொறுப்பாளர்கள், தி.மு.க., மதிமுக, விடுதலை சிறுத் தைகள் கட்சி, இந்திய கம்யூ னிஸ்ட் கட்சி, இந்திய கம்யூ னிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி, காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக்கட்சிகளின் பொறுப்பாளர்கள் ஆர்ப் பாட்டத்தில் பங்கேற்றனர்.

துணைப்பொதுச்செய லாளர் வழக்குரைஞர் ச. பிரின்சு என்னாரெசு பெரி யார் இணைப்புரை வழங்கி னார்.

திராவிட மாணவர் கழக சட்டக் கல்லூரி மாநில அமைப்பாளர் து.இளமா றன் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடையநல்லூர் கு.இராஜாமணி

### ஜூன் 21 (2009)



தனது இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு 1946ல் மதுரையில் நடைபெற்ற ‘கறுப்புச் சட்டை மாநாட்டில்’ பங்கேற்றவர். அதன்பின்னர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு கடையநல்லூர் நகர மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் கடையநல்லூர் நகரக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

நீதிகேட்டு நெடிய பயணத்தில் கலந்து கொண்டதுடன், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“கடையநல்லூர் ராஜாமணி இன்று நேற்றல்ல, பல ஆண்டுகாலமாக கழக அரசின் சாதனைகளை சொந்த முயற்சியினால் துண்டு பிரசுரமாக அச்சடித்து மக்களிடம் வழங்கி பிரச்சாரம் செய்தவர்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

பொருள்களின் தரத்தினை உயர்த்தி

# குடும்ப அட்டைதாரர்களின் நலனை உறுதி செய்திடுவீர்!

### உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி - அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்!

சென்னை, ஜூன் 21 - உணவு மற்றும் உண வுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்க ரபாணி தலைமையில் 2024 - 25 ஆம் ஆண்டிற் கான உணவு மற்றும் உண வுப்பொருள் வழங்கல் துறையின் செயல்பாடுகள் குறித்து அனைத்து துறைத் தலைமை அலுவலர்களுட னான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமை தாங்கிய உணவு மற்றும் உணவுப்பொருள் வழங் கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி உணவுப்பொ ருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழ கம், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் மற்றும் குடிமைப்பொருள் வழங் கல் குற்றப்புலனாய்வுத் துறை ஆகியவற்றின் புதிய திட்டங்கள், அறிவிப்புகள் மற்றும் வரைவு மானியக் கோரிக்கை குறித்து விவா தித்தார்.

கே.எம்.எஸ். 2023 - 24 ஆம் கொள்முதல் பருவத் திற்கான நெல் மணிகளை தடங்கலின்றி விவசாயி களிடமிருந்து விரைவில் கொள்முதல் செய்து அதற் கான ஊக்கத்தொகை யினை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் உடனடி யாக செலுத்தி அரவை ஆலைகளுக்கு அனுப்பி தரமான அரிசி நியாய விலைக் கடைகளுக்கு அனுப்புவதை உறுதி செய் திட வேண்டும் என்றும் கிடங்குகளில் போதுமான அளவு பச்சை / புழுங்கல் அரிசி இருப்பு வைக்கவும் அறிவுறுத்தினார்.

நவீன அரிசி அரவை ஆலைகளில் அரைக்கப்ப டும் அரிசியில் கருப்பு மற் றும் பழுப்பு நீக்கம் செய்து தரக்கட்டுப்பாட்டு அதிகா ரியின் மூலம் தரத்தினை உறுதி செய்திட அறிவுறுத் தப்பட்டது.

சிறப்புப் பொது விநி யோகத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்டு வரும் பாமாலின் மற்றும் துவரம் பருப்பு இருப்பு அளவினை கேட்டறிந்து அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் ஆய்வு செய்து பொதுமக்களுக்கு துரிதமாக வழங்கிட அறிவு றுத்தினார்.

நியாயவிலைக் கடை கள் குறிப்பிட்ட நேரத்தில் திறக்கப்பட்டு, விநியோ கிக்கப்படும் பொருட்க ளின் தரத்தினை உறுதி செய்து குடும்ப அட்டை தாரர்களின் நலனை உறுதி செய்திட அறிவுரைகள் வழங்கினார்.

அரிசிக் கடத்தலை தடுக்க குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரிகள் அனைத்து மாவட்ட வழங் கல் அலுவலர்களுடன் இணைந்து செயல்பட அறிவுரைகள் வழங்கப்பட் டன.

இக்கூட்டத்தில், கூட்டு றவு, உணவு மற்றும் நுகர் வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், உணவுப்பொ ருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலா ளர் / ஆணையாளர் ஹர் சஹாய் மீனா, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிர் வாக இயக்குநர் எஸ்.பழ னிசாமி, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் ஆ. அண்ணா துரை, குடி மைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு காவல் துறைத் தலைவர் க.ஜோஷி நிர்மல் குமார் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

# நெல்லையில் சிறப்பாகக் கொண்டாட முடிவு!

### கழக மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி - பிரச்சாரக் குழு - சமூக வலைத்தளக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூன் 21 - மக்களின் முகவரி முத்தமி ழ றிஞர் கலைஞர் அவர்க ளின் நூற்றாண்டு நிறைவு விழாவை நெல்லையில் சிறப் பாக நடத்த கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, பிரச்சார க்குழு, சமூக வலைத் தளக்குழு கூட்டத் தில் தீர்மானம் நிறை வேற் றப்பட்டது.

தி.மு.க. மகளிர் அணி, மக ளிர் தொண்டரணி பிரச்சா ரக் குழு சமூக வலைத்தளக் குழு ஆலோசனைக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் தி.மு.க. மகளிர் அணி மக ளிர் தொண்டர் அணி பிரச் சாரக்குழு சமூக வலைத்தளக் குழு ஆலோசனைக் குழு ஆகியவற்றின் மாநில நிர்வா கிகள் கூட்டம் நேற்று முன் தினம் (19.6.2024) மாநில மகளிரணித் தலைவர் விஜயா தாயன்பன் தலை மையில் மகளிரணிச் செயலா ளர் ஹெலன் டேவிட்சன் மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல். ப.இராணி, மகளிரணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார் மகளிர் தொண் டரணிச் இணைச் செயலா ளர் தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநில மகளிரணி நிர்வாகிகள் அங் கயற்கண்ணி, சேலம் சுஜாதா, சத்யா பழனிக்கு மார், வாசுகி ரமணன், மலர் மரகதம், விஜிலா சத்யா னந்த், மாலதி, தேன்மொழி, உமாமகேஸ்வரி, ஜெசி பொன் ராணி, ரியா ஆகி யோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற் றப்ப ட்ட தீர்மானங்கள் வரு மாறு :

மாநில இலக்கிய அணி தலைவர் முன்னாள் அமைச் சர் இந்திர குமாரி, மாநில மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன் அவர்க ளின் புதல்வி தேவிகா ஸ்ரீத ரன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் தமிழ்ச் செல்வி ஆகியோரின் மறை வுக்கு மகளிர் அணி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

தேர்தலில் கழக வேட்பா ளர்களுக்கும் தோழமைக் கட்சி வேட்பாளர்களும் பெருவாரியான வாக்கு வித் தியா சத்தில் வெற்றி பெற வேண்டுமென்பதற்காக தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து தீவிர பிரச் சாரத்தால், திராவிட மாடல் அரசின் சாதனைகளால் 40க்கு 40 வெற்றி பெற கார ணமாக இருந்த தமிழ்நாட் டின் முதலமைச்சர் கழக தலைவர் அவர்களுக்கும், கழக இளைஞரணி செயலா ளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும். நாடாளு மன்ற குழு தலைவர் கழக துணைச் பொதுச் செயலா ளர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றி தெரிவிக்கிறது.

தமிழக மக்களின் குரலாக நாடாளுமன்றத்திலே சமூக போராளியாக, தூத்துக்குடி நாடாளுமன்ற மக்களின் விடிவெள்ளி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தன்னை எதிர்த்து போட்டி யிட்ட அனைத்து வேட்பா ளர்களையும் டெபாசிட் இழக்க செய்து அதிக வாக்கு கள் வித்தியாசத்தில் வெற் றிப் பெற்ற கழகத் துணை பொது செயலாளர் கனி மொழி கருணாநிதி அவர்க ளுக்கு நாடாளுமன்ற குழுத் தலைவர் பொறுப்பை வழங்கிய கழகத் தலைவர் அவர்களுக்கு மகளிரணி நன் றியினை தெரிவித்துக் கொள்கிறது.

40 நாடாளுமன்றத் தொகுதி களிலும் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்க ளின் வெற்றிக்காக உழைத்த மகளிர் அணி சகோதரிக ளுக்கு நன்றி தெரிவிக்கிறது.

உயிரினும் மேலான உடன்பிறப்புகளின் தலை வர், தமிழ்நாடு மக்களின் முகவரி முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு நிறைவு விழா, திருநெல்வேலியில் சிறப் பாக கொண்டாடுவது என தீர்மானம் செய்யப்பட்டது.

கழக மகளிர் அணி, மக ளிர் தொண்டர் அணியின் நகர, பகுதி, ஒன்றிய, நிர்வா கிகள், அமைப்பாளர் ஒரு வர், துணை அமைப்பாளர் கள் 5 பேர், பேரூர் நிர்வா கிகள் அமைப்பாளர்கள், ஒருவர் துணை அமைப்பா ளர் 3 பேர் வீதம் இன்னும் 15 நாட்களுக்குள் நிர்வாகி கள் நியமனம் செய்திட கூட் டத்தில் முடிவு செய்யப் பட்டது.

தமிழினத் தலைவர் கலை ஞர் நூற்றாண்டை முன் னிட்டு ஏற்கனவே 10 இலட் சம் மகளிரணி உறுப்பி னர்களை சேர்க்க முடிவு செய்யப்பட்டதை விரை வாக முடிக்க கூட்டம் கேட் டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், வேலூர் மக்களவை உறுப்பினராக இரண்டாவது முறையாக தேர்ந்தெடுத்த வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, ஆலங்காயம் பேரூர் புலவர்பள்ளி, தர்மராஜபுரம், ஆலங்காயம், பெத்தூர், மார்க்கேட் மூலை, ஆலங்காயம் ஆதிதிராவிடர் காலனி, பங்கூர் ஆகிய பகுதிகளில் வாக்காளர் பெருமக்களையும், கழக தொண்டர்களையும் கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி. நேரில் சந்தித்து நன்றிகளை தெரிவித்துக்கொண்டார். உடன் பேரூர் கழக செயலாளர் ஸ்ரீதர், பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் உடனிருந்தனர்.